# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2210/18 - 2021 ජනවාරි මස 13 වැනි බදාදා - 2021.01.13

*2210/18 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 21/1978* (x) (*அ*)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக அங்கீகரிக்கப்படுகின்ற GA 2232 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்டநஷனல் புடிஸ்ட் அகடமி தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2016, ஒகத்து 9 ஆந் திகதிய 1979/21 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, அதன் I ஆம் நிரலில் காணப்படும் "தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொலைத் தொடர்பில் தொழில்நுட்பவியல் இளமாணி" என்னும் பதிவையும் அதன் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காணப்படும் அதனது சுருக்கீட்டுப் பெயரையும் உடனடுத்து இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

***அட்டவணை*** I

நிபந்தனைகள்

1. வியாபார முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி (எஸ்எல்கியுஎப் மட்டம் 6) எனத் தலைப்பிடப்பட்ட கற்கைநெறி தொடர்பில் மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை பின்வருவனவாக இருத்தல் வேண்டும்-

(i) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தகப் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமானவை ;

(ii) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட சமமான கற்கைநெறியொன்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') ;

2. கண்டிய நடனத்தில் கௌரவ அரங்கேற்றல் கலை இளமாணி (எஸ்எல்கியுஎப்6) தொடர்பில் மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் கலைத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமான தகைமை ;

3. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்தாவது (05) ஆண்டிலும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பாட மீள் மீளாய்வு ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கீட்டுப் பெயர் |
|---|---|
| வியாபார முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி | பிபிஎம் கௌரவ |
| கண்டிய நடனத்தில் கௌரவ அரங்கேற்றல் கலை இளமாணி | பிபிஏ கௌரவ (கண்டிய நடனம்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2021, சனவரி 11.

01-548

---

ச.வ.பி 21/1978 (X) (அ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 101137 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ். எல். ரி. கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், (2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 2164/54 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "உயிர் முறைமையியல் பொருளியல் விஞ்ஞான இளமாணி சிறப்பு" என்னும் பதிவை உடனடுத்துப் பின்னர் இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கமைய இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. தரவு விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி (இதக மட்டம் 6), கிளவுட் கம்பியுட்டிங் கௌரவ விஞ்ஞான இளமாணி (இதக மட்டம் 6), மென்பொருள் பொருளியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி (இதக மட்டம் 6) மற்றும் இணையப் பாதுகாப்பில் கௌரவ விஞ்ஞான இளமாணி (இதக மட்டம் 6) என தலைப்பிடப்பட்ட கற்கைநெறி தொடர்பில் மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான குறைந்தபட்ச நுழைவுத் தகைமையானது-

(i) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதீக விஞ்ஞானத் துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும் ;

(ii) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியொன்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும்.

2. சிவில் பொறியியலில் கௌரவ பொறியியல் விஞ்ஞான இளமாணி (இதக மட்டம் 6) என தலைப்பிடப்பட்ட கற்கைநெறி தொடர்பில், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதத்தில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ;

3. இசையில் கௌரவ இளமாணி (இதக மட்டம் 6) என தலைப்பிடப்பட்ட கற்கைநெறி தொடர்பில், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் ('S') அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ;

4. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்தாவது (05) ஆண்டிலும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பாட மீள் மீளாய்வு ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை** II

| *நிரல் I*<br>பட்டங்கள் | *நிரல் II*<br>பட்டத்திற்கான சுருக்கீடுகள் |
|---|---|
| தரவு விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (தரவு விஞ்ஞானம்) |
| கிளவுட் கம்பியுடிங் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (கிளவுட் கம்பியுடிங்) |
| மென்பொருள் பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (மென்பொருள் பொறியியல்) |
| இணைய பாதுகாப்பில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (இணைய பாதுகாப்பு) |
| சிவில் பொறியியலில் கௌரவ பொறியியல் விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (பொறியியல்) (சிவில் பொறியியல்) |
| இசையில் கௌரவ இளமாணி | பிமியுசிக் கௌரவ |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2020, திசெம்பர் 31.*

*01-549*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.